[1989 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை அமல்படுத்துகிறபோது அதற்கு ஆதரவும் வரும் ; எதிர்ப்பும் வரும். ஆனால் எந்தப் பகுதி மக்களும் பாதிக்கப்படாத வண்ணம் இந்த அரசு திட்டத்தை வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம் வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நெல்லை மாவட்டத்திற்குத் தொடர்பு உடையது என்பதால்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். முன்பு கழக அரசினால் அடிக்கல் நாட்டப்பட்ட பச்சையாறு அணைத்திட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உருவாகி வரும் அத்திக்கடவுத் திட்டம் எப்போது நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நதியின் குறுக்கே அணை கட்டினால் அந்த அணையின் கீழே இருக்கும் மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் அது மீறப்படுகிறது. அவ்வாறு மீறப்படும் அணைக்கட்டுக்களைப் பொறுத்தவரையில் அக்குறைபாடுகளை நீக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, எங்கு, எப்படி, யாரால் மீறப்பட்டது என்ற விவரத்தைத் தனியாகத் தந்தால் அது குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எலிகுப்பம் அணை.

*3152 திரு ச. அழகுவேலு :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்தில், எலிகுப்பம் அணை (பம்பையாற்றில் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃப்ரெஞ்ச் அரசாங்கத்திற்கும் இங்கிருந்த ஆங்கில அரசாங்கத்திற்கும் இடையே பம்பை ஆற்றில் அணை கட்டி கண்டமங்கலம் பகுதியை வளப்படுத்தவேண்டுமென்ற ஒரு திட்டம் சுதந்திரத்திற்கு முன்னால் இருந்தது. அதற்குப் பிறகு காங்கிரஸ் அரசாங்கமும் அதைப் பரிசீலனை செய்து வந்தது. தயவுசெய்து அதை இந்த அரசும் பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(9-50)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த ஏலிகுப்பம் என்பதற்கு மாதிரிமங்கலம் என்று பெயர். அதற்குத் தெற்குப் பகுதியிலே பம்பையாறு ஓடுகிறது. அதன் அருகே ஒரு அணை கட்டினால் 12 ஏரிகளுக்கு அதன் மூலமாகப் பாசனம் கொடுக்கலாம் என்றுதான் அரசு முதலில் சிந்தித்தது. அதிலே 4 ஏரிகள் பாண்டிச்சேரி மாநிலத்திற்குள் வருகின்றன. நமக்கு முன்னுரிமை தருவது குறித்து, பாண்டிச்சேரி மாநில அரசு முட்டுக்கட்டையாக இருந்து கொண்டிருக்கிறது. மீண்டும், மீண்டும் பாண்டிச்சேரி அரசாங்கத்தோடு அரசு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தை சுமுகமாகத் தீர்ந்த பிறகு இந்த அணை கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மேம்பாலம் கட்டுதல்.

*3485. திருமதி யசோதா செல்லப்பா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சையில் இருந்து மெலட்டூர் வழியாக கும்பகோணம் செல்லும் சாலையில் திட்டையின் அருகே இரயில் பாதையின் குறுக்கே உள்ள கீழ்பாலத்திற்கு பதிலாக மேம்பாலம் கட்டப்படுமா?

(ஆ) இல்லையெனில் அங்கு தேங்கும் மழை நீரை வெளியேற்ற மின்விசை பம்பு அமைக்க அரசு முன்வருமா?